செ.வெ.எண்:889/2017 நாள்:20.11.2017

**மத்திய அரசால், திருத்தியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வீடு கட்டும் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

மத்திய அரசின் தொழிலாளர் நல அமைப்பில், பீடி, சினிமா மற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில், திருத்தியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வீடு கட்டும் திட்டத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மத்திய அரசின், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும், தொழிலாளர் நல அமைப்பில், பீடி, சினிமா மற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில், மத்திய அரசால், திருத்தியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வீடு கட்டும் திட்டமானது (RIHS 2016) 02.03.2016 முதல் அமல்படுத்தப்பட்டு, மேற்படி திட்டத்தின் கீழ் 2017–18 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்த திருத்தியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வீடு கட்டும் திட்டம் 2016 இன் கீழ் மாத ஊதியம் ரூபாய் 21,000/–க்கு மிகாமல் இருக்கும், பீடி, சினிமா மற்றும் சுரங்கத் தொழிலாளர்கள், தங்களுக்கென வீடு கட்டிக்கொள்வதற்கு, மத்திய அரசு மானியமாக ரூபாய் 1,50,000/–யை மூன்று தவணைகளில், முறையே 25% அதாவது ரூபாய் 37,500/– (முன்பணமாகவும்) 60% அதாவது ரூபாய் 90,000/– (மேல்தளம் முடிவுற்ற நிலையிலும்) மற்றும் 15% அதாவது ரூபாய் 22,500/– (முழுவதும் கட்டப்பட்ட பின்பும்) ஆகிய தவணைகளாக வழங்கப்படுகிறது.

இந்த திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் பீடி, சினிமா மற்றும் சுரங்கத் தொழிலாளர்கள், பணியில் சேர்ந்து, குறைந்தது ஒரு வருடம் கடந்திருக்க வேண்டும் மற்றும் தொழிலாளர் நல அமைப்பில் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். தொழிலாளர்கள், தங்களுக்கென சொந்தமாக, சுமார் 60 சதுர மீட்டர் அளவு (தோராயமாக 650 சதுர அடி) வீட்டு மனை பெற்றிருக்க வேண்டும் எனினும், பொருளாதார ரீதியாக பின் தங்கிய வகுப்பினருக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கும் பிரதான மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் தளர்வு அளிக்கப்படும்.

மேலும், இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் தொழிலாளர்களுக்கு (கணவன், மனைவி), தங்களுக்கென சொந்தமாக வீடு இருத்தல் கூடாது. தொழிலாளர்கள், தங்கள் பெயரிலோ அல்லது தங்களை சார்ந்தோர் பெயரிலோ, மத்திய அல்லது மாநில அரசிடமிருந்து

ஏற்கனவே வீடு கட்டுவதற்கு மானியம் பெற்றிருத்தல் கூடாது. மேலும் இந்த திட்டத்தின் கீழ் மானியப் பயன்பெறும் தொழிலாளர்கள், வேறு எந்த மத்திய அல்லது மாநில அரசின் வீடு கட்டும் திட்டத்தின் கீழும்2 பயனாளியாக இருத்தல் கூடாது.

தொழிலாளர்கள், தங்களது சேமிப்பு வங்கி கணக்கு எண்ணை, ஆதார் எண்ணுடன் இணைத்திருக்க வேண்டும். இந்த திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் தொழிலாளர்கள், தங்களது வீடுகளை 18 மாதத்திற்குள் கட்டி முடிக்க வேண்டும். இந்த திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் இரண்டு படுக்கை அறைகள், ஒரு முகப்பு கூடம், ஒரு சமையல் அறை, ஒரு குளியல் அறை, ஒரு கழிப்பறை மற்றும் ஒரு துணிகள் உலர வைப்பதற்கான ஒதுக்கிடம் ஆகியவற்றை பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு நல ஆணையர் அலுவலகம், தொழிலாளர் நல அமைப்பு, 8–2 , செயின்ட் தாமஸ் சாலை, மேட்டு திடல், பாளையம் கோட்டை, திருநெல்வேலி–627 011 என்ற முகவரியிலும், 0462–2578266 என்ற தொலைபேசி எண்ணிற்கும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்.